திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணா கலை அரங்கிலுள்ள உழவர் சந்தை தொடர்ந்து பயன்படாத நிலையில் உள்ளது. உழவர்கள் யாரும் அங்கே வந்து தாங்கள் பயிரிட்ட காய், கனிகளை வியாபாரம் செய்ததாகத் தெரியவில்லை. பல பத்திரிகைகளில் இந்தச் செய்தி தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கிறது. அந்த உழவர் சந்தை உழவர்களுடைய பயன்பாட்டுக்கு எப்போது வரும் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் தொடங்கப்பட்ட அந்த உழவர் சந்தை பயன்படும் என்றுதான் அங்கே தொடங்கினோம். ஆனால், அங்கே காய்கறி வரத்து குறைவாகவும், நுகர்வோர்கள் குறைவாகவும் வரக்கூடிய காரணத்தினாலே எதிர்பார்த்த அளவுக்கு அந்தச் சந்தை வெற்றிகரமாகச் செயல்படவில்லை. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றியமைத்தால் பயன் இருக்குமா என்று இப்போது அரசு அலுவலர்களிடத்திலே கேட்டு, அறிக்கை பெறப்படவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

3—

நீதிமன்ற வளாகம்

***59308—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவைச் செயலகம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளித்தலையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க 9-11-2009-ல் ரூபாய் 410.54 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சாதாரண ஏழைக் குடும்பத்திலே பிறந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, அதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் முதல் தொகுதியாம் குளித்தலை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கி, இன்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சட்டப் பேரவையிலே நானும் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

குளித்தலை தொகுதியில் உள்ள நீதிமன்ற வளாகத்திலுள்ள மிகவும் பழமைவாய்ந்த கட்டடத்தை மாற்றி, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும் என்கின்ற என்னுடைய கோரிக்கையினை ஏற்று, புதிய கட்டடம் வழங்கியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் குளித்தலை தொகுதியின் மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, குளித்தலையிலே தொழிலாளர் நீதிமன்றம் இல்லை—Labour Court இல்லை, அதற்காக அதுசம்பந்தமான வழக்குகளுக்காகத் திருச்சிக்குச் செல்லவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றது. ஆகவே, குளித்தலையில் ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்களிடம் கேட்டு, விடைபெறுகின்றேன்.

[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்பொழுது அங்கு நான்கு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. Sub-Court, District Munsiff Court, Judicial Magistrate-1, Judicial Magistrate-2 என்ற நான்கு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நான்கு நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான வாய்ப்பைத்தான் அரசு உருவாக்கியிருக்கிறது. தொழிலாளர் நீதிமன்றம் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்; தேவை என்றால் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கண்ணன்.

திரு. வே. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக அரசு அனுமதி வழங்கி ஆவன செய்துள்ளது. இதுவரை அதற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்படவில்லை. ஆகவே, செஞ்சியில் உள்ள "B" ஏரியில் உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்கு நீர்ப்பிடிப்புப் பகுதி இல்லாத நிலத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கும். எந்த இடத்தைத் தேர்வு செய்வது என்பதை உயர் நீதிமன்றம்தான் முடிவு செய்யும். எனவே, அவர்கள் ஒரு இடத்தைப் பார்த்து அந்த இடம் தேவை என்று சொன்னால், அதிலே எந்தப்

2010 ஏப்ரல் 5]

பிரச்சினையும் இல்லை என்றால், அரசு நிலத்தையும் வழங்கிவிடும். செஞ்சியைப் பொறுத்தவரையில் என்ன நிலைமை என்பதை விவரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு எனது ஒட்டன்சத்திரம் தொகுதிக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைக்கப்பட்டு, அந்த இரண்டு நீதிமன்றங்களும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு நிதியை ஒதுக்கும். இந்த மானியக் கோரிக்கையின்போது அதுகுறித்து பரிசீலிக்கப்படும். நிதி வசதியும், உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியும் கிடைத்தால் அரசு அடுத்த நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் மேட்டூர் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு அரசும் ஒப்புதல் கொடுத்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் இருந்தும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டு, அதிலே சின்னப் பிரச்சினை, ஏற்கெனவே நீதிமன்றம் அமைந்திருக்கிற இடத்தைச் சுற்றி இருக்கிற அரசுக்குச் சொந்தமான இடத்தில் வனத் துறை, பொதுப் பணித் துறை, மின்சாரத் துறை, ஆகிய துறைகளுக்கு உள்ளடங்கிய இடங்களை எல்லாம் ஒருங்கிணைத்து வழங்க

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேண்டும் என்று வழக்கறிஞர்கள் சங்கத்தால் கோரிக்கை வைக்கப்பட்டும், இதுவரையிலே அது ஏற்றுக்கொள்ளப்படாமல், நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, இது நீண்ட கால நிலுவைப் பிரச்சினை என்ற காரணத்தாலே, இந்தத் துறை உடனடியாகத் தலையிட்டு, காலம் தாழ்த்தாமல் மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, *2007-2008* ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கடைசி நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேட்டூரையும் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அரசாங்கம் நிதி ஒதுக்கத் தயாராக இருக்கிறது. மேட்டூரிலே இடம் என்பது பெரிய பிரச்சினை. நீங்கள் கேட்கிற இடம் ஆற்று ஓரம். அதிகமான விலை. இரண்டாவது, நீர்நிலைப் பிடிப்புகளிலே எந்தவிதமான கட்டடத்தையும் கட்டக்கூடாது என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை. அதனாலே நாம் அதில் பிரவேசிக்க முடியாது. பொதுவாக நீங்கள் காட்டு இலாகா சம்பந்தமான இடத்தைக் குறிப்பிட்டீர்கள், நாம் கிட்டேயே போக முடியாது. ஏனென்றால், Reserve Forest Act-ல் இருக்கிறது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்று, பொதுப் பணித் துறை இருந்தால் அதில் எடுத்துக்கொள்கிறீர்கள்.

ஆனால், நிலைமை என்ன என்று கேட்டால், அந்த இடத்திலேயும் சில பிரச்சினைகள் உண்டு. மாண்புமிகு உறுப்பினரை ஒன்று கேட்கிறேன்; *2007-2008*-லே உங்கள் ஊரான மேட்டூருக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் தரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் உறுப்பினர் அவர்கள் சிரத்தை எடுத்து, பேசி, ஏதாவது ஒரு இடத்தைக் காட்டினால், நாளைக்கேகூட நாங்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)* No, second supplementary கிடையாது. உட்காருங்கள்.

2010 ஏப்ரல் 5]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசியிலே புதிய நீதிமன்றம் கட்டுவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டு, நானும், தென்காசி தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும் நேரடியாகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்துச் சென்று, அதற்கான இடத்தைக் காண்பித்து, அந்த இடத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டு அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்ற அதே வேளையில், ஒரு குளமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த இடத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு, நீண்ட நாட்களாக அந்தக் கோப்பு நிலுவையிலே இருந்து வருகின்றது. சம்பந்தப்பட்ட அந்தக் குளத்திற்கு ஆயக்கட்டோ, பாசனமோ எதுவுமே இல்லை. அது, முழுமையாக எந்தவிதமான நீரேற்றும் பணியும் நடக்காத குளமாகவே இருக்கின்ற காரணத்தினாலும், அது தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலேயே இருக்கின்ற காரணத்தினாலும், அந்த இடத்தையே வழங்கி, அந்த இடத்திலேயே நீதிமன்றத்தைத் துவக்குவதற்கோ அல்லது அரசு உத்தேசித்திருக்கின்ற வேறு ஏதாவது ஓர் இடத்திலே நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டுவதற்கோ இந்த ஆண்டாவது ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தைப் பொறுத்தவரையிலே, அரசு உத்தேசித்திருக்கின்ற இடத்திலே நீதிமன்றம் கட்டமுடியாது. நீதிமன்றம் ஒத்துக்கொள்கிற இடத்தில்தான் நாங்கள் கட்டமுடியும். அந்த இடத்தை அவர்கள் வந்து பார்த்து, 'எங்களுக்கு இது தேவை, இந்த இடத்திலே கட்டுங்கள்' என்றால் கட்ட முடியுமே தவிர, நீங்கள் இந்த இடத்தில் கட்டிக் கொடுங்கள் என்று கேட்டால் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது.

தென்காசியைப் பொறுத்தவரையில், ரூபாய் 528.48 இலட்சம் நிதியையும் ஒதுக்கிவிட்டோம். 12-10-2009-லிருந்து நிதியும் தயாராக இருக்கிறது. ஆகையினாலே, இடத்தைத் தருவதைப் பொறுத்தவரை, நீங்கள் காட்டுகிற இடத்தை உயர் நீதிமன்றம் ஒத்துக்கொண்டு, பிறகு 'அந்த இடத்தில் கட்டடம் கட்டுங்கள்' என்று அவர்கள்

அரசாங்கத்திற்குச் சொன்னால், அதிலே எந்தவிதமான வில்லங்கமும் இல்லையென்றால், அரசாங்கம் கட்டத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை குறித்து மீண்டும் உயர் நீதிமன்றத்தோடு நான் பேசிப் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படுகிறதென்று சொன்னால், அதிலே எல்லா நீதிமன்றங்களும் அந்த எல்லைக்குள், ஒரு கட்டுக்கோப்புக்குள் இருக்கவேண்டுமென்கிற ஒரு நிலைப்பாட்டோடுதான் அப்பணி செய்யப்படுகிறது. எங்களுடைய வேலூரில் இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் A பிளாக்கைக் கட்டாமல், B பிளாக்கைக் கட்டிவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு வேலூருக்கு வருகை தந்து அந்தக் கட்டடத்தைத் திறந்தார்கள். A பிளாக் கட்டவேண்டும் என்று பல முறை நாங்கள் கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, A இல்லாமல் B இல்லை, ஆகவே, அது கட்டப்படும் என்றுகூட முதலிலே சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்—மற்ற இடங்களில் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், இடப் பிரச்சினை அல்லது வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் எங்கள் பகுதியில் அங்கே இடமும் இருக்கிறது. அங்கே நீதிமன்றம் கட்ட வேண்டும் என்று 1996 ஆம் ஆண்டிலிருந்து முன்மொழிவுகளை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். அமைச்சர், நீங்களும் எங்களுடைய மாவட்டத்துக்காரர். நீங்கள் சட்டத் துறை அமைச்சராக இருக்கிற உங்கள் காலத்தில்கூட இந்த நிதியைப் பெறமுடியாமல், கட்டமுடியாமல் இருக்கக்கூடிய நிலை இருந்துவிடக் கூடாது என்பதற்காக, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மற்ற இடங்களிலே கொடுக்கப்பட்டுப் பயன்படாமல் இருக்கும் நிதியைக் கொஞ்சம் divert செய்தாவது இந்த ஆண்டே A பிளாக் கட்டடம் வேலூரில் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A பிளாக் கட்டாமல் B பிளாக்கைக் கட்டிவிட்டீர்கள் என்று ரொம்ப நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் ஆதங்கப்பட்டுக்கொண்டிருக்கிறார். வேண்டுமென்றால் அந்த B பிளாக்கை A பிளாக் என்று எழுதிவிடலாம். (சிரிப்பு) பிரச்சினை அதுதானென்றால், அதைவேண்டுமென்றால் A பிளாக் என்று எழுதிவிடலாம். வேலூரிலே கட்டப்பட்டிருக்கிற அந்த B பிளாக்கிற்குள்ளாகவே எல்லா நீதிமன்றங்களுக்கும் இடம் இருக்கிறது, இன்னும் இடம் காலியிருக்கிறது என்று எனக்கு ரிப்போர்ட் கிடைத்திருக்கிறது. ஆகையினாலே, எத்தனை நீதிமன்றங்கள் உள்ளன என்று பார்த்து, இடம் தேவையென்றால் கட்டுவோம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் B பிளாக்கைக் கட்டிவிட்டார்கள்; அதற்காக A பிளாக்கைக் கட்டவேண்டுமென்பதற்காகக் கட்டமுடியாது. நிதிநிலைமைக்கேற்ப, தேவையென்றால் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் புதிய சட்டப் பேரவைக் கட்டடம் கட்டப்பட்டு, முதன்முதலாகத் துணைக் கேள்வி கேட்கின்ற ஒரு நிலையை உருவாக்கித் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டமான திருவள்ளூரிலே ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சுமார் 10 மாத காலமாகப் போராடி வருகிறார்கள்; நீதிமன்றத்தைப் புறக்கணித்து வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நிலம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு நிதியொக்கீடு செய்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவது, புதிய நீதிமன்றங்களை உருவாக்குவது என்பது அரசே எடுக்கிற முடிவல்ல. அதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், ஊடகங்கள் வாயிலாக இது மற்றவர்களுக்கும் தெரிய வேண்டும். உயர் நீதிமன்றம் இந்த இடத்திலே, இந்த Court தேவை என்று அரசுக்குத் தெரிவித்தால், அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப அதற்கு அனுமதி வழங்குகிறது. அதேபோன்று, இந்த இடத்திலே, இந்த நீதிமன்றத்திற்கு இடம் போதவில்லை, இங்கே நீங்கள் கட்டுங்கள் என்று கேட்டால், நிலைமைக்கேற்ப அரசு தாராளமாகச் செய்கிறது. காரணம், இந்தியாவிலேயே 4 ஆண்டு காலத்தில், 300 கோடி ரூபாயை ஒதுக்கி, நீதிமன்றங்கள் கட்ட வேண்டும் என்பதற்காக நிதியொதுக்கி இருக்கிற அரசு, நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு மட்டுந்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் இருக்கிற அவ்வளவு நீதிமன்றங்களும், நீதிபதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர். கடந்த 4 ஆண்டுகளில் நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு infrastructure வசதிகளைச் செய்து கொடுக்க 254.00 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் வழக்கறிஞர்கள், நாங்கள் strike செய்வோம், நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டும், நாங்கள் strike செய்வோம், ஒரு புது Court வேண்டுமென்று கேட்பது எந்த வகையிலும் நியாயமில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நாங்களாகக் கட்ட முடியாது. Sub-Court வேண்டுமென்று, திருத்தணியிலே நேற்றைய முன்தினம் பார்த்தீர்கள் என்றால், ஒரு கட்சி தூண்டிவிட்டு, அங்கே strike பண்ணப் போகிறார்கள். நான் உடனே சொன்னேன். எங்களிடத்திலே அதைப்பற்றிக் கேட்டிருக்க வேண்டும். அங்கேயிருக்கிற சந்திரன் வழக்கறிஞர்கள் சார்பிலே என்னைச் சந்தித்தார்கள். உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். High Court-ல் இருந்து எனக்கு order வந்தால் நான் செய்கிறேன் என்று சொன்னேன். High Court-ல் இருந்து, Sub-Court -ஐக் கட்டும் பணியை இப்போது எடுத்துக்கொள்ளலாம்; துவக்கலாம் என்று இப்போதுதான் order வந்திருக்கிறது. ஆனால் அதைக்கூடக் கேட்காமல் ஓர் அரசியலாக்கி, நாங்கள் strike செய்வோம், எங்களுக்கு Sub-Court வேண்டும்; strike செய்வோம், எங்களுக்குப் புது Court வேண்டும், building வேண்டும் என்று கேட்டால் அது முறையல்ல. எனவே, அரசாங்கம் எதைச் செய்தாலும் நீதித் துறையைப் பொறுத்தவரையில் உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படிதான் நடக்கும்.

2010 ஏப்ரல் 5]

திருவள்ளூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதும், உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி இந்த அரசு நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***63070—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) கரூர் மாவட்டத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், உயர் கல்வித் துறை, பக்கம் 21-ல், 'மத்திய அரசு நிதியுதவியுடன் 7 புதிய பலதொழில்நுட்பக் கல்லூரிகள் வரும் கல்வியாண்டில் தொடங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியோ, கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ,

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS